திரு. தி கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, மற்றப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களோடு பயணம் செய்ய இன்னொருவருக்கும் அனுமதி கொடுக்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் இந்தப் பேருந்துகளில் குறைந்தபட்சம் எங்களை மட்டுமாவது அனுமதிக்க மறு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; தலைவர் அவர்களே, அப்படி இப்போது அனுமதிக்கப்படுமேயானால், அடுத்த ஆண்டு எங்களோடு இன்னொருவரையும் சேர்த்து பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வரும். எனவே இப்போதைக்கு அனுமதிக்கவில்லை.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள் பணம் கொடுத்து பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்ற வாக்குறுதி தந்தால், படுக்கை வசதியோடு கூடிய இத்தகைய பேருந்துகளில், நேரடி ரயில் வசதி இல்லாத நாகர்கோவில் போன்ற பகுதிகளுக்காவது அனுமதிக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற பேருந்துகளையும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.

*30வினா எண் 18392—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஊழியர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்க போக்கு வரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 31–3–1983 அன்று கணக்குப்படி 5805 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) "உங்களுக்கு ஒரு சொந்த வீடு" என்ற திட்டத்தின் கீழ் சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. முதல் தொடக்கமாக, தஞ்சை மாவட்டத்தில் 87 வீடுகளும், திருச்சி மாவட்டத்தில் 100 வீடுகளும் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1984 பிப்ரவரி 15]

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் இந்த திட்டத்தில், பணிமனையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள அம்மாசத்திரம் என்ற கிராமப் பகுதி ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாக தகவல். ஆனால் பணிமனைக்கு அருகிலேயே நிலம் இருப்பதாகவும் தகவல். எனவே அப்படி பணிமனைக்கு அருகிலே இருக்கும் இடங்களையே ஆர்ஜிதம் செய்து தொழிலாளர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அம்மாசத்திரம் என்னும் அந்த இடத்திலேதான் 9¼ ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே 87 வீடுகளைக் கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி அருகிலேயே இடம் இருக்குமேயானால், அதை பயன்படுத்திக் கொள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரைப் போன்றவர்கள் உதவி செய்வார்களேயானால், நிச்சயமாக தயக்கம் காட்டாமல் எடுக்கலாம். ஆனால் விலை அதிகமாக இருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் அவ்வளவு பணம் கொடுத்து வாங்குவதற்கு சிரமப்படுவார்கள். எனவே குறைந்த விலையில் கிடைத்தால் வாங்கலாம். நிலங்கள் மேலும் தேவைப்படத்தான் செய்கிறது. எனவே குறைந்த விலையில் கிடைத்தால் கையகப்படுத்த அரசு முயற்சிக்கும்.,

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கையகப்படுத்தப்படவுள்ள மனைகளுக்கான தொகை எவ்வளவு என்பதையும், தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். அத்தோடு, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சமீபத்தில் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. அதில் இந்த நில ஆர்ஜித சம்பந்தமாகவும் ஏதாவது உண்டா? அதாவது இதில் அதற்குச் சம்பந்தம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனித் தனியாக ஒவ்வொரு நபருக்கும் எவ்வளவு வரும் என்கிற கணக்கு தற்சமயத்திலே என்னிடத்திலே இல்லை. அங்கே ஒரு தவறு நடந்திருக்கிறது, அதை நாங்கள் கண்டு பிடித்திருக்கிறோம். இந்த அரசு வந்த பிறகுதான் அதைக் கண்டு பிடித்திருக்கிறது. ஏறத்தாழ பத்து வருட காலமாக அந்த ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். முழு விவரத்தையும், அரசாங்கம் விரைவிலே பரிசீலித்து அதை அவைக்கு தெரிவிக்கும்.

அம்பத்தூர் நகரியம் 'மேனாம்பேடில்' என்னும் இடத்திலுள்ள அரசாங்க மாணவர் விடுதி.

*31—(*வினா எண். 12945)*—திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—